**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No.45/2024 |
| Deposition of witness for Prosecution | : P.W-5 |
| Name | : சந்திரமோகன், வயது 68 |
| Father Name/Husband Name | : குமாரசாமி |
| Village | : கழுகுமலை |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : தீப்பெட்டி தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2024.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து தீப்பெட்டி தொழில் செய்து வருகிறேன். 21.05.2023 ஆம் தேதி ஞாயிற்று கிழமை மாலை 06.00 மணியளவில் நானும் செந்தூர்பாண்டி மகன் கருப்பசாமியும் ஆஞ்சநேயர் கோவில் அருகே பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த போலிசார் அந்த இடத்தை படம் வரைந்து எழுதினார்கள்.
2. அதில் எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் படித்து பார்த்து கையொப்பம் செய்தோம். **என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அந்த ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. நீங்கள் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் என்ன விவரம் என்று தெரியாது கையொப்பம் கேட்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். அதிகாரி பார்த்து கையொப்பம்

கேட்டதன் பேரில் மறுக்க முடியாமல் கையொப்பம் செய்தேன்.

2. நீங்கள் கையொப்பம் செய்த இடத்தில் இரத்தம் சிந்திக்கிடந்ததா என்றால் அதனை நான் பார்க்கவில்லை. உடைந்த வண்டியின் உதிரி பாகங்கள் இருந்ததா என்றால் நான் அதனை பார்க்கவில்லை. தற்செயலாக நின்று பேசிக்கொண்டிருந்தேன். ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.